# அலகு - 20

## எதுகை, மோனை, இயைபு இவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெழுதுதல்

**எதுகை, மோனை, இயைபு இவற்றில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுத்தல்**

எதுகை, மோனை, இயைபு இவற்றில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுத்தல்

**I. மோனை:** செய்யுளில் முதலெழுத்து ஒன்றிவருவது மோனை எனப்படும். (மோனை – முதன்மை)

**சீர்மோனை:** செய்யுளில் சீர்தோறும் முதலெழுத்து ஒன்றி வருவது சீர் மோனை எனப்படும்.

**துப்பார்க்குத் துப்பாய் துப்பாக்கித் துப்பார்க்கு**

* இக்குறட்பாவில் சீர்தோறும் முதலெழுத்துக்கள் அனைத்தும் (து) ஒன்றி வந்துள்ளன. இவ்வாறு முதல் எழுத்து ஒன்றிவருவது சீர் மோனையாகும்.

1. **அடிமோனை:** செய்யுள்களில் அடிதோறும் முதல் சீரின் முதல் எழுத்து ஒன்றிவருவது அடிமோனையாகும்.

    1. தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
       தன்நெஞ்சே தன்னைச் சுடும்.
    2. உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
       உள்ளத்துள் எல்லாம் உளன்.

    இக்குறட்பாவில் முதலடியின் முதலெழுத்தும் (த) இரண்டாமடியின் முதலெழுத்தும் (த) ஒன்றி வந்துள்ளன. இவ்வாறு அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவருவது அடிமோனையாகும்.

2. **இணை மோனை (1,2) :** ஓரடியில் முதல் சீரிலும் இரண்டாம் சீரிலும் வரும் முதல் எழுத்து ஒன்றி வருவது இணை மோனை எனப்படும்.

    கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்

3. **பொழிப்பு மோனை (1,3) :** ஓரடியில் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் வரும் முதல் எழுத்து ஒன்றி வருவது பொழிப்பு மோனை எனப்படும்.

   புனையா ஓவியம் போல நிற்றலும்

4. **ஒரூஉ மோனை (1,4) :** ஓரடியில் முதல் சீரிலும் நான்காம் சீரிலும் வரும் முதல் எழுத்து ஒன்றி வருவது ஒரூஉ மோனை எனப்படும்.

   பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த

5. **கூழை மோனை (1,2,3):** ஓரடியில் முதல் சீரிலும் இரண்டாம் சீரிலும மூன்றாம் சீரிலும் வரும் முதல் எழுத்து ஒன்றி வருவது கூழை மோனை எனப்படும்.

   தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்

6. **மேற்கதுவாய் மோனை (1,3,4) :** ஓரடியில் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் நான்காம் சீரிலும் வரும் முதல் எழுத்து ஒன்றி வருவது மேற்கதுவாய் மோனை எனப்படும்.

   வானின்று உலகம் வழங்கி வருதலால்

7. **கீழ்கதுவாய் மோனை (1,2,4) :** ஓரடியில் முதல் சீரிலும் இரண்டாம் சீரிலும் நான்காம் சீரிலும் வரும் முதல் எழுத்து ஒன்றி வருவது மேற்கதுவாய் மோனை எனப்படும்.

   இருள்மேல் இருவினையும் சேரா இறைவன்

8. **முற்று மோனை (1,2,3,4) :** செய்யுளில் நான்கு சீரிலும் முதலெழுத்து ஒன்றி வருவது முற்று மோனை எனப்படும்.

   எ.கா.: பெற்றார் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்பு

**II. எதுகை:**

செய்யுளில் இரண்டாமெழுத்து ஒன்றிவருவது எதுகை எனப்படும். (எதுகை - இரண்டாம்)

1. **சீர்எதுகை :** செய்யுளில் சீர்தோறும் இரண்டாமெழுத்து ஒன்றி வருவது சீர் எதுகை எனப்படும்.

    எ.கா.: சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க

2. **அடிஎதுகை :** செய்யுள்களில் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது அடி எதுகை யாகும்.

    எ.கா.: தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
    வானம் வழங்கா தெனின்.

    இக்குறட்பாவில் முதலடியின் இரண்டாமெழுத்தும் (ன) இரண்டாமடியின் இரண்டாமெழுத்தும் (ன) ஒன்றி வந்துள்ளன. இவ்வாறு அடிதோறும் இரண்டாமெழுத்து ஒன்றிவருவது அடிஎதுகையாகும்.

3. **இணை எதுகை (1,2):**ஓரடியில் முதல் சீரிலும் இரண்டாம் சீரிலும் வரும் இரண்டாமெழுத்து ஒன்றி வருவது இணை எதுகை

    எ.கா.: பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற

4. **பொழிப்பு எதுகை (1,3) :** ஓரடியில் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் வரும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது பொழிப்பு எதுகை

    எ.கா.: தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்

5. **ஒரூஉ எதுகை (1,4):** ஓரடியில் முதல் சீரிலும் நான்காம் சீரிலும் வரும் முதல் எழுத்து ஒன்றி வருவது ஒரூஉ எதுகை எனப்படும்.

    எ.கா.: துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்

6. **கூழை எதுகை (1,2,3):** ஓரடியில் முதல் சீரிலும் இரண்டாம் சீரிலும் மூன்றாம் சீரிலும் வரும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது கூழை எதுகை எனப்படும்.

எ.கா.: பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்

7. **மேற்கதுவாய் எதுகை (1,3,4)** : ஓரடியில் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் நான்காம் சீரிலும் வரும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது மேற்கதுவாய் எதுகை எனப்படும்.

   எ.கா.: அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்

8. **கீழ்கதுவாய் எதுகை (1,2,4)** : ஓரடியில் முதல் சீரிலும் இரண்டாம் சீரிலும் நான்காம் சீரிலும் வரும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது மேற்கதுவாய் எதுகை எனப்படும்.

   எ.கா.: ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

9. **முற்றெதுகை (1,2,3,4)** : செய்யுளில் நான்கு சீரிலும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது முற்றெதுகை எனப்படும்.

   எ.கா.: துப்பார்க்குத் துப்பாய் துப்பாக்கித் துப்பார்க்கு

**III. இயைபு:**

செய்யுளின் அடிகளிலும் சீர்களிலும் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ ஒன்றி வருவது இயைபுத் தொடை எனப்படும்.

கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்
கொடிகள் வானம் படிதர மூடும்
கண்ட பேரண்டந் தண்டலை நாடும்
கனக முன்றில் அனம்விளை யாடும்.

மேற்கண்ட பாடல்களில் இறுதியில் ஒரே ஒலி தரும் கூடும், மூடும், நாடும், ஆடும் என்னும் சொற்கள் அமைந்துள்ளன. இவ்வாறு வருவது இயைபுத் தொடை எனப்படும்.

**எ.கா.:**

தென்றல் விளையாடு மலை
தமிழ்முனிவன் வாழு மலை